26.09.2025

OS No: 559/2019

வா.சா. 1 திரு. கார்த்திகேயன் த/பெ சேகர்

**<u>1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சாம்பவிகா கல்வி அறக்கட்டளை ஆரம்பித்த ஆண்டான 1999-2000 ல் எனது வயது என்ன என்றால் 7 வயது ஆகும். எனது தாய் தந்தை மேற்படி அறக்கட்டளையில் உறுப்பினராக 2006 ம் வருடம் சேர்ந்த காலத்தில் எனக்கு வயது 10 இருக்குமா என்றால் 13 வயது. மேற்படி அறக்கட்டளை ஆரம்பிக்கப்பட்ட விவரமும் எனது தாய் தந்தையர் உறுப்பினராக சேர்ந்த விவரமும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் எனது தாய், தந்தையர் உறுப்பினராக சேர்ந்த விவரம் எனக்கு தெரியும் அறக்கட்டளை ஆரம்பித்த 1999ம் வருடம் தெரியாது. 2012 ம் வருடம் முதல் 2025 ம் வருடம் வரை சாம்பவிகா பள்ளிக்கூடத்தை எனது தகப்பனார் தான் நேரடியாக நடத்தி வருகிறார் என்றால் சரிதான். எனது தந்தை தாவா வழக்கில் சாட்சியம் அளித்திட்டால் உண்மை விவரம் தெரிந்துவிடும் என்பதால் சாட்சியம் அளிக்க நீதிமன்றம் வராமல் என்னை சாட்சியம் அளிக்க செய்துள்ளார் என்றால் சரியல்ல. மாறன் என்பவருக்கும், முத்துக்கண்ணன் என்பவருக்கும் பிரச்சனை ஏற்பட்டு முத்துகண்ணன் அறக்கட்டளையில் இருந்து விலகி சென்றது குறித்து எனக்கு நேரடியாக விவரம் தெரியாது என்றால் சரியல்ல தெரியும். மேற்படி மாறனுக்கும், முத்துகண்ணனுக்கும் எதற்காக சண்டை ஏற்பட்டது என்றால் பள்ளியில் பணத்தை கையாடல் செய்தது சம்மந்தமாக சண்டை. மேற்படி மாறனுக்கும், முத்துகண்ணனுக்கும் இடையே பணம் கையாடல் குறித்து சண்டை ஏற்பட்டதாக சொல்வதில் காவல் நிலையத்தில் அது சம்மந்தமாக புகார் எதுவும் கொடுக்கப்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மாறனும், முத்துகண்ணனும் சிறு வயது முதல் நண்பர்கள் என்றும் அவர்களுக்குள் எந்த வித சண்டையும் ஏற்படவில்லை, சண்டை ஏற்பட்டதாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி முத்துகண்ணன் சாம்பவிகா கல்வி அறக்கட்டளையில் இருந்து விலகியவுடன் சோழபுரத்தில் ரமணவிகாஸ் என்ற பள்ளிக்கூடத்தை ஆரம்பித்துள்ளார் என்றால் அவர்

மட்டும் ஆரம்பித்தாரா என்று தெரியாது. 2006 ம் வருடம் மேற்படி அறக்கட்டளையில் இருந்து சரவணன் என்பவர் தனக்கு அரசு ஆசிரியர் வேலை கிடைத்த காரணத்தால் விலகி சென்றார் என்றால் அரசு ஆசிரியராக உள்ளார் என்ற விவரம் தெரியும் 2006 ம் வருடம் தான் அரசு ஆசிரியர் வேலை கிடைத்தது என்று எனக்கு தெரியாது. மற்றோரு அறக்கட்டளையின் உறுப்பினரான கணேசன் என்பவர் அவருடைய மனைவி இறந்த காரணத்தினால் அறக்கட்டளையில் இருந்து விலகி ஓய்வில் இருந்தார் என்றால் சரியல்ல. மேற்படி அறக்கட்டளையில் இருந்து விலகி சென்ற மூவரும் மாறனுடன் தகறாறு செய்து வெளியேறவில்லை என்றும் அவர்களுக்கான பங்கு தொகையை முறையாக பெற்று கொண்டு தான் வெளியேறினார்கள் என்றால் சரிதான். மேற்படி வழக்கின் 1ம் பிரதிவாதி காசி சாம்பவிகா பள்ளியின் பொருப்பாளராக இருந்த வரை தரமான உயர்தர கல்வி வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி 1ம்பிரதிவாதி பள்ளியின் பொருப்பாளராக இருந்த காலகட்டத்தில் தான் நானும், எனது சகோதரரும் மேற்படி பள்ளியில் படித்தோம் என்றால் சரிதான். மேற்படி பள்ளியில் படித்த பின்பு தான் நான் பொறியியல் படிப்பு படித்து சட்டம் முடித்துள்ளேன் என்றால் நான் 10ம் வகுப்பு வரை தான் அங்கு படித்தேன் பொறியியல் படிப்பும், சட்டமும் படித்துள்ளேன். மேற்படி பள்ளி ஆரம்பித்த நாள் முதல் 2012 ம் ஆண்டு வரை 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்புகளில் ஒவ்வொரு ஆண்டும் 100 சதவீதம் மாணவர்களின் தேர்ச்சி இருந்தது என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. எனது தகப்பனார் மேற்படி பள்ளியில் சேர்வதற்கு முன்பு மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் முதல் 10 இடங்களில் எங்கள் பள்ளியின் மாணவர்கள் தேர்ச்சி பெற்றார்கள் என்றால் எல்லா வருடமும் பெற்றார்களா என்று எனக்கு தெரியாது. எனது பெற்றோர் மேற்படி பள்ளியின் பொருப்பாளர்களாக வருவதற்கு முன்பு மாவணவர்களுக்கு தரமான உயர்தர கல்வி வழங்கப்பட்டு வந்தது என்றால் சரியல்ல. தாவா வழக்கு அறக்கட்டளை பொருப்பிற்கு வருவதற்கு முன்பு எனது பொற்றோர் என்ன வேலை பார்த்தார்கள் அவர்களுடைய வருமானம் எவ்வளவு

என்றால் எனது தந்தை வியாபாரம் செய்தார் அவருடைய வருமானம் என்ன என்று எனக்கு தெரியாது. எனது அம்மா வேலை எதுவும் பார்க்கவில்லை. 2006 க்கு முன்பாக எனது தந்தை வருமான வரி செலுத்தி வந்தாரா என்றால் எனக்கு அது தெரியாது. எனது தாய் தந்தையர் அறக்கட்டளையில் சேரும் போது எவ்வளவு பங்கு தொகை கொடுத்து சேர்ந்தார்கள் என்றால் தெரியாது. மேற்படி அறக்கட்டளையில் மூவர் விலகி சென்ற பிறகு அறக்கட்டளையின் உறுப்பினராக சேர்வதற்கு சிவகங்கை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து பெரும் செல்வந்தர்கள் வந்தார்கள் என்றும் அவர்களை தவிர்த்து விட்டு 1ம் பிரதிவாதி காசி அவருடைய மகள் மற்றும் மருமகனை உறவு முறையின் காரணமாக உறுப்பினராக சேர்த்தார் என்றால் மேற்படி செல்வந்தர்கள் உறுப்பினராக சேர முன் வந்ததாக சொல்வது உண்மை அல்ல எனது தாயாரின் தந்தை 1ம்பிரதிவாதி என்பதால் 1ம் பிரதிவாதி வர்ப்புரித்தி தான் எனது தாய் தந்தையை அறக்கட்டளையின் உறுப்பினராக சேர்த்தார்கள். மேற்படி அறக்கட்டளையில் சேர்வதற்கான பங்கு தொகை கொடுத்திடும் அளவிற்கு எனது தாய் தந்தையருக்கு என்ன வருமானம் இருந்தது என்றால் எனது தந்தை வியாபாரம் செய்து வந்தார். மேற்படி எனது தந்தை வியாபாரம் செய்தார் என்பதை காட்டக்கூடிய ஆவணம் எதுவும் தாவா வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தாய் தந்தையர் அறக்கட்ளையின் உறுப்பினரான பின்பு 2007 முதல் 2012 ம் வருடம் வரையிலான அறக்கட்டளையின் கூட்டத்திற்கு வரவில்லை என்றால் அறக்கட்டளை கூட்டம் கூட்டப்பட்டது குறித்தும் கூட்டத்திற்கு வரசொல்லியும் எனது அப்பா, அம்மாவிற்கு தகவல் யாரும் சொல்லவில்லை மேற்படி காலகட்டத்தில் எனது அப்பா அம்மா பள்ளிக்கு முறையாக வந்தார்கள். மேற்படி காலகட்டத்தில் பள்ளிகூடத்தின் நிர்வாக கூட்டம் எதிலும் எனது அப்பா கலந்து கொள்ளவில்லை என்றும் கலந்து கொள்ளாமல் வெளியூரில் இருந்தார் என்றும் எனது பெற்றோர் முயைாக பள்ளிக்கு வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2012ம் வருடவாக்கில் எனது தந்தை DSP ஸ்டாலின் அவர்களிடம்

புகார் கொடுத்து மேற்படி காவலரின் வர்ப்புறுத்தல் காரணமாக கூட்டம் நடைபெற்று எனது தந்தை தலைவராகவும், எனது தாய் செயலாளராகவும், 3ம்பிரதிவாதி மலர்வேணி பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்றால் மேற்படி கூட்டத்திற்கு முன்பாக கூட்டம் நடத்த வேண்டும் என்பதற்காக வழக்கறிஞர் அறிப்பு அனுப்பியும் அதில் எந்த நடவடிக்கையும் இல்லை என்பதால் தான் காவல் துறையில் புகார் செய்யப்பட்டு அவர்களது அறிவுத்தலின் பெயரில் கூட்டம் நடைபெற்றது. மேற்படி கூட்டத்தில் 1ம்பிரதிவாதி காசி மற்றும் அவருடைய மகன் பாரதிதாசன் கலந்து கொள்ளவில்லை என்றும் மற்ற நான்கு பேர் கலந்து கொண்டார்கள் என்றால் அறக்கட்ளையின் டிரஸ்டியாக இருந்தவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள் அவர்கள் யார் என்ற விவரம் எனக்கு தெரியாது. மேற்படி அறக்கட்டளையின் பழைய தலைவர் பொருப்பை புதிய தலைவர் பெற்று கொண்டு பொருப்பெடுத்துக் கொண்டாரா என்றால் இல்லை. பள்ளிக்கூடத்தின் பொருப்பை 1ம்பிரதிவாதி காசியிடம் இருந்து சட்டத்தின் புறம்பாக நாங்கள் பெற்றுக்கொண்டோம் என்றால் சரியல்ல அவர் தான் பொருப்பில் இருந்து விலகிக்கொண்டார். பள்ளிக்கூட அலுவலக அறையில் பள்ளிக்கூடத்தின் வரவு செலவு சம்மந்தப்பட்ட ஆவணங்களும் காசோலைகளும் இருந்து அவற்றை நாங்கள் எடுத்துக்கொண்டோம் என்றால் 2012 ம்வருடத்திற்கு முந்தை எந்த ஒரு ஆவணங்களும் பள்ளியின் அலுவலகத்தில் இல்லை. நாங்கள் மேற்படி ஆவணங்களை எடுத்துக்கொண்டு தற்போது வழக்கிற்காக இல்லை என சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2012 க்கு முன்பு 1ம் பிரதிவாதி காசி மேற்படி பள்ளியில் 1, 2 அடுக்குகளை கொண்ட 5 கட்டிடங்களை கட்டிவிட்டு சென்றார் என்றால் இல்லை. நர்ஷரி பள்ளிக்கு என தனி கட்டிடம் இருந்தது என்றால் சரிதான். 2012க்கு முன்பு மேற்படி பள்ளியில் எத்தனை கட்டிடங்கள் இருந்தது என்றால் 2 கூரை செட்டுக்ளும், 3 பிளாக்குகள் கட்டிடமும் இருந்தன. மேற்படி சொன்ன 3 பிளாக்குகளும் 1, 2 தளங்களை கொண்டவை என்றால் சரிதான். நாங்கள் பள்ளிக்கூடத்தை எங்கள் வசம்

எடுப்பதற்கு முன்பே சைன்ஸ் லேப் ஒன்று இருந்தது என்றால் சரிதான். கம்பியூட்டர் லேப் ஒன்று தனி கட்டிடமாக இருந்தது என்றால் தனி கட்டடிமாக இல்லை அது ஒரு பிளாக்கில் இருந்தது. நாங்கள் பொருப்புக்கு வருவதற்கு முன்பே ஆண், பெண் என இருவருக்கும் தனித்தனியாக கழிப்பறைகள் இருந்தன என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி மேற்படி பள்ளிக்கூடத்தில் பிள்ளையார் கோவில் ஒன்றை கட்டியிருந்தார் என்றால் கோவில் இல்லை பிள்ளையார் சிலை இருந்தது. எங்கள் பொருப்பிற்கு முன்னால் மேற்படி பள்ளிக்கூடத்தில் 80 அடி நீளத்தில் மாணவர்கள் அமர்ந்து சாப்பிடும் வகையில் ஒரு செட் ஒன்றை 1ம் பிரதிவாதி ஏற்படுத்தியிருந்தார் என்றால் இல்லை. மேற்படி பள்ளியில் எங்கள் பொருப்புக்கு முன்பு மாணவர்களை ஏற்றி செல்வதற்கு 2 பஸ், 15 வேன் இருந்தது என்றால் சரியல்ல. 2 பஸ் 4 வேன் இருந்தது. 2004 ம் வருடம் கும்பகோணம் பள்ளி தீ விபத்திற்கு பின்பு அனைத்து பள்ளிகளிலும் கூரை செட் இடிக்கப்பட்டு கெட்டி கட்டிடங்களும் கழிப்பறைகளும் இருந்தால் மட்டுமே அரசு அங்கீகாரம் கொடுக்கப்படும் என அரசானை பிறப்பிக்கப்பட்டது என்றால்சரிதான். மேற்படி அரசானைக்கு புறம்பாக கட்டிடங்கள் இருக்கும் பட்சத்தில் அரசால் அங்கீகாரம் கொடுக்கப்படுவது இல்லை என்றால் சரிதான். நாங்கள் பள்ளிக்கூடத்தின் பொருப்பை ஏற்பதற்கு முன்பே 2009ம் வருடம் 10 ம் வகுப்பிற்கும், 2011 ம் வருடம் 12 ம் வகுப்பிற்கும் பொது தேர்வு எழுதுவதற்கான மையமாக சாம்பவிகா பள்ளி இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நாங்கள் பொருப்பிற்கு வந்த பின்பு 3ம்பிரதிவாதியிடம் பள்ளியின் அலுவலக உதவியார்கள் மூலம் வெற்று காசோலைகளில் 3ம்பிரதிவாதி மலர்வேணியிடம் கையெழுத்து செய்து தரமாறு எனது தந்தை கேட்டதால் தான் எங்களுடன் உள்ள தொடர்பை 3ம்பிரதிவாதி நிருத்திவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அறக்கட்டளையின் பைலாவின்படி அங்கீகரிக்கப்பட்ட 2 வங்கி கணக்குகள் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்தியன் வங்கி சிவகங்கை கிளையில் 2 கணக்ககுகள், மெர்கண்டேல் வங்கி சிவகங்கையில் ஒரு

கணக்கு ஆக மேற்சொன்ன 3 வங்கி கணக்குகள் மட்டுமே அறங்காவலர் குழு ஒப்புதல் பெற்ற வங்கி கணக்குகள் என்றால் பள்ளியின் அனைத்து வங்கி கணக்குகளும் அறங்காவலர் குழு ஒப்புதல் பெற்ற வங்கி கணக்குகள் ஆகும். மேற்படி எனது தாய் தந்தையர் சிவகங்கை சிட்டி யூனியன் வங்கியில் 3 கணக்குகளும், தமிழ்நாடு மெர்கடேல் வங்கியில் ஒரு கணக்கும், ஐடிபிஐ வங்கியில் ஒரு கணக்கும், பேங் ஆப் இந்தியா வங்கியில் ஒரு கணக்கும், ஐசிஐசிஐ வங்கியில் ஒரு கணக்கும் புதிதாக துவங்கி மாவணர்களிடம் கல்வி கட்டணங்களை அறங்காவலர் ஒப்புதல் இன்றி வசூலித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. மேற்சொன்ன வங்கிகளில் எனது பொற்றோர் வங்கி கணக்கு துவங்கியிள்ளனரா என்று எனக்கு தெரியாது. அறக்கட்ளையின் ஒப்புதல் இன்றி புதிய வங்கி கணக்குகளை துவங்குவது அறக்கட்டளை விதி 25 க்கு எதிரானது என்றால் வங்கி கணக்குகள் அறக்கட்டளையின் ஒப்புதலின் படியே துவங்கப்பட்டுள்ளது. 23.08.2012 ம் தேதி தேர்தலில் எனது பெற்றோர் அறக்கட்டளைக்கு தேர்வு செய்யப்பட்டனர் என்றால் சரிதான். எனது பெற்றோரின் பதவி காலம் 3 வருடம் என்றால் அது பற்றி சரியாக எனக்கு தெரியவில்லை. 22.08.2015ல் எனது தாய் தந்தையரின் அறக்கட்டளையில் உள்ள பதவி காலம் முடித்து விட்டது என்றும் 23.08.2015ல் அறக்கட்டளைக்கு புதிதாக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. 23.08.2015 ம் தேதி அறக்கட்டளையின் கூட்டம் கூட்டப்படுவது குறித்து எங்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி 23.08.2015ம் தேதி கூட்டம் நடைபெற்று அதில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் நகலானது எங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டதா என்றால் கூட்டம் நடந்தது குறித்து அறிவிப்பு வரவில்லை அதனால் எந்த தீர்மானத்தின் நகலும் எங்களுக்கு வரவில்லை. பள்ளிக்கூடத்திற்கு அங்கீகாரம் இருந்தால் மட்டுமே பொது தேர்வு எழுதிட அரசு அனுமதிக்கும் என்றால் சரிதான். பள்ளியின் குறுக்கே உயர் மின் அலுத்த கம்பிகள் சென்றதை பள்ளிக்கு வெளியே மாற்றிட வேண்டி அங்கீகாரம் நிறுத்தி வைக்கப்பட்டது

என்றும் அங்கீகாரம் பள்ளிக்கு இல்லாமல் இருந்தது இல்லை என்றால் சரியல்ல. மேற்படி பள்ளிக்கு எங்கள் பொருப்பிற்கு முன்னால் அங்கீகாரம் எதுவும் வாங்கப்படாமல் இருந்தது. பள்ளி ஆரம்பத்தில் இருந்து தற்போது வரை பொது தேர்வுகளை மாணர்கள் எழுதிட அரசு எவ்வித தடையும் செய்திடவில்லை என்றால் சரிதான். பள்ளியின் அங்கீகாரத்தை புதுப்புக்கவில்லை என வேண்டும் என தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நிரூபண வாக்குமூலத்தில் பாரா 5 ல் சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகள் உண்மை அல்ல என்றும் வழக்கிற்காக தவறாக சொல்லப்பட்டவை என்றால் சரியல்ல உண்மை தான். நிரூபண வாக்குமூலத்தில் பாரா 6 ல் சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகள் உண்மை அல்ல என்றும் வழக்கிற்காக தவறாக சொல்லப்பட்டவை என்றும் அதற்கான ஆதரவு ஆவணங்கள் இன்றி சொல்லப்பட்டவை என்றால் சரியல்ல உண்மை தான். 2012க்கு முன்பு பள்ளி நிர்வாகம் சரியாக நடைபெறவில்லை என்றும் நாங்கள் பொருப்பிற்கு வந்த பின்பே பள்ளியின் நிர்வாகத்தை சீர்படுத்தினோம் என்ற சங்கதி உண்மை அல்ல என்றால் சரியல்ல. மேற்படி அறக்கட்டளையின் வரவு செலவு கணக்குகளை 1ம் பிரதிவாதியிடம் கேட்டதாக சொல்வதற்கு சாட்சிய சான்று ஆவணங்கள் உள்ளதா என்றால் நான் தான் அவரிடம் சென்று கேட்டேன். வழக்கில் நான் கேட்டுள்ள 1, 2 பரிகாரங்கள் கால வரம்பு தடை சட்டத்தால் தடை செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. மேற்படி எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்ட CMA 5/2014 தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றால் சரிதான். மேற்படி உத்தரவின் பேரில் தாக்கல் செய்யப்பட்ட CRP மனுவும் மாண்புமிகு உயர் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்ட்டது என்றால் சரிதான். மேற்படி தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட விவரத்தை நிரூபண வாக்குமூலத்தில் சொல்லிடாமல் மறைத்துள்ளேன் என்றால் சரிதான். ( சாட்சி தற்போது மேற்படி விவரம் தெரியாது என சொல்கிறார்). தாவா வழக்கு சங்கதியை நிரூபிக்க கூடிய ஆவணங்கள் எதையும் ஆவணங்களாக தாக்கல்

செய்யவில்லை என்பதால் தாவா வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.09.26 17:35:34 +0530